# கடவுள் நம்முடைய பெலன்

## உலகளாவிய பிரார்த்தனை மற்றும் நோன்பு நாள் - ஜனவரி 12, 2022

துதி— கடவுள் நம்முடைய பெலன்:விருப்பம், குணம், மனம், அல்லது நோக்கம் ஆகியவற்றில் உறுதியைக் கொண்டவர்; சக்தியை எதிர்க்கும் சக்தி

**கர்த்தர்** ராஜரிகம்பண்ணுகிறார், மகத்துவத்தை அணிந்துகொண்டிருக்கிறார்; **கர்த்தர்** பராக்கிரமத்தை அணிந்து, அவர் அதைக் கச்சையாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்; ஆதலால் பூச்சக்கரம் அசையாதபடி நிலைபெற்றிருக்கிறது.சங்கீதம் 93:1

மகிமையும் கனமும் அவர் சமுகத்தில் இருக்கிறது; வல்லமையும் மகிழ்ச்சியும் அவர் ஸ்தலத்தில் இருக்கிறது.1 நாளாகமம் 16:27

உன் தேவன் உனக்குப் பலத்தைக் கட்டளையிட்டார்; தேவனே, நீர் எங்கள்நிமித்தம் உண்டுபண்ணினதைத் திடப்படுத்தும்.சங்கீதம் 68:28

நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளினீர்; என் ஆத்துமாவிலே பெலன்தந்து என்னைத் தைரியப்படுத்தினீர் சங்கீதம் 138:3

## பாவறிக்கை

இவ்விதமாய் நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக.1 தெசலோனிக்கேயர் 3:13

## நன்றி செலுத்துதல்

நானோ உம்முடைய வல்லமையைப் பாடி, காலையிலே உம்முடைய கிருபையை மகிழ்ச்சியோடு புகழுவேன்; எனக்கு நெருக்கமுண்டான நாளிலே நீர் எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர். சங்கீதம் 59:16

## மன்றாடுதல்

### நம்முடைய பிள்ளைகளுக்காக

அவன் பிரதியுத்தரமாக: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான். **லூக்கா** 10:27

### நம்பும் (விசுவாசிக்கும்) பள்ளி மாணவர் அமைப்பு/ஆசிரியர்/ஊழியர்கள்

**கர்த்தரையும்** அவர் வல்லமையையும் நாடுங்கள்; அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள்.சங்கீதம் 105:4

### நம்பிக்கையற்ற (விசுவாசிக்காத) பள்ளி மாணவர் அமைப்பு/ஆசிரியர்கள்/ஊழியர்கள்

என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் **ரோமர்** 10:9

### பள்ளியின் கரிசனைகள்

ஜனங்களின் வம்சங்களே, **கர்த்தருக்கு** மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள்; **கர்த்தருக்கே** அதைச் செலுத்துங்கள் **1** நாளாகமம் **16:28**

ஆன்மீக விழிப்புணர்வு, மறுமலர்ச்சி, விவிலிய மதிப்புகள் மற்றும் உயர் நடத்தைக்குரிய, பாதுகாப்பு, பிற…

### Mipi ஜெப கரிசனைகள்

என் பெலனே, உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்; தேவன் எனக்கு உயர்ந்த அடைக்கலமும், கிருபையுள்ள என் தேவனுமாயிருக்கிறார், என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு. சங்கீதம் **59:17,** பிலிப்பியர் **4:13**

## ஆசீர்வாதம்

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும், உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக. கர்த்தர் உங்கள் இருதயங்களை தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக. 2 தெசலோனிக்கேயர் 2:16-17 and 3:5